Department Sabaragamuwa Province/ Weekly School Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of Education

| | | |
|---|---|---|
| **பாடம்** | **:** | **1.2 விவசாய நடவடிக்கையின் போது ஏற்படும் சூழல் பாதிப்புக்களை தவிர்க்கும் வகையில் பசுமைத் தொழினுட்ப தீர்வுகளைப் பயன்படுத்துவோம்.** |
| **தொழினுட்பப் பரப்பு** | **:** | **விவசாயம்** |
| **தேர்ச்சி** | **:** | **2.4 உயிர்ச் சூழலைக் காப்பதில் பங்களிப்பார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **:** | **2.4 சூழலை நேசித்து பாதுகாப்பதுடன் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வார்.** |

சமையலறைக் கழிவுகளைப் பயன்படுத்தி உயிர்வாயுவை உற்பத்தி செய்வோம்.

**செயற்பாடு தொடர்பான அறிவுறுத்தல்கள்.**

- பாடப்புத்தகத்தின் 41ம் பக்கத்திலுள்ள செயற்பாடு 1.10 இனை நன்கு வாசியுங்கள்.
- பெரியார் ஒருவரின் உதவி கொண்டு உயிர்வாயு மாதிரி ஒன்றினைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- பல்வேறு வகையான கழிவுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட மாதிரிகளில் விரைவாக உற்பத்தி ஆக்கப்படும் உயிர்வாயு கழிவினை இனங்கண்டு கொள்ளுங்கள்.

**மேலே குறிப்பிட்ட செயற்பாட்டுக்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய கற்றல் வளங்கள்.**

தரம் 9 பாடப்புத்தகம்

அலகு - 1.2

பக்க இலக்கம் - 41

**இப்பாடத்தினூடாக பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள்.**

- விவசாய நடவடிக்கைகளினால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களை இனங்காண்பார்.
- சூழற் பாதிப்புக்களை இழிவுப்படுத்திக் கொள்ளத்தக்க வழிமுறைகளை முன்மொழிவார்.
- பசுமை விவசாயத் தொழினுட்பத் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சாதகமான சூழலொன்றை உருவாக்குவதற்கான முறைகளைக் கையாண்டு பார்ப்பார்.